மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1974 டிசம்பர் முடிய ரூபாய் 9.21 லட்சம் செலவு செய்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்ற நிலையில் இன்னும் பல பேர் பக்கத்திலே குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான இட வசதி இல்லையா? அதை எவ்வாறு மறுபடியும் அவர்களுக்குக் கொடுக்கவிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அந்தப் பகுதியிலே இருந்தவர்களை வெளியேற்றி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. பூச்சு வேலை நடக்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தாம்பரத்தில் வீட்டுவசதி வாரிய மனைகள் ஒதுக்கீடு.

*693 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கடந்த ஆண்டில் தாம்பரத்தில், வீட்டு மனைகள் ஒதுக்கப்படுவதற்கான விண்ணப்பங்கள் கோரியதா?

(இ) ஆம் எனில், எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டன?

(உ) எத்தனை பேர்களுக்கு மனைகள் ஒதுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

கோயம்புத்தூரில் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.

*694 வினா.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் டவுன், லிங்கையன் தோட்டம் T.S.No. 1194/1, 1195/1-களில் அமைந்துள்ள நிலம், கோவை வீட்டு வசதி வாரியத்தின் கோவை கிளை 1967-ம் வருடத்தில் எடுத்துக் கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், நிலச் சொந்தக்காரர் நிலக்கிரயம் கொடுக்கப்பட்டுவிட்டதா?

The HON. THIRU K. RAJARAM: (*a*) Yes.

(*b*) A sum of Rs. 5,24,431.76 was covered by the award No. 1 of 1967, dated 19th July 1967 of the R.D.O. Out of this amount, a sum of Rs. 4,13,016.95 was disbursed direct to the land owners and through the Court. Since some of the land owners preferred claims for high compensation under section 18 of the Land Acquisition Act, a sum of Rs. 1,10,323·54 was deposited into the Court and a sum of Rs. 1,091.27 as Revenue Deposit.

திரு. செ. அரங்கநாயகம்: கோவை மேற்கு தொகுதியிலே இது போன்று பொன்னைய ராஜபுரம் என்ற பகுதி இருக்கிறது. அங்கே குடிசைகள் இருக்கின்றன. ஆனால், அந்த இடத்தின் சொந்தக்காரரர் அவர்களை எல்லாம் வெளியேற்றி இருப்பதால் அதையும் ஹவுசிங் போர்டு எடுத்துக் கொள்ளுமா? அல்லது நகரத்திலே இருக்கின்ற இது போன்ற பகுதிகளை எல்லாம் நகர சொத்துக்கள் உச்ச வரம்பு மசோதாவின்படி தற்பொழுதிருக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டே சர்க்கார் எடுத்துக்கொள்ள முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பொன்னைய ராஜபுரத்தைப்பற்றி தனிக் கேள்வி போடவும்.

Houses for Freedom Fighters

*695 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct houses for aged and infirm Freedom Fighters in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) மதுரை நகரில் வாழும் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சங்க உறுப்பினர்களுக்கு சிறப்பு மலிவு வீட்டு வசதி திட்டத்தின் கீழ், நகர்ப்புற மேம்பாட்டுக் கழக நிதி உதவியுடன் 170 வீடுகளைக் கட்டும் செயற்குறிப்பு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: இது ஜில்லா வாரியாகக் கொடுக்கப்படுமா? இதற்காக எவ்வளவு பணம் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.